பக்கங்கள் 20+2

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | மாசி 28 புதன்கிழமை 12.03.2025 | அதிர்வு 221

## யாழில் இயங்கிய வன்முறைக் கும்பலின் தலைவர் சிறையில்!

யாழ்ப்பாணத்தில் இயங்கிய பிரபல வன்முறைக் கும்பலின் தலைவர் எனக் கூறப்படும் நபருக்கு யாழ். நீதிவான் நீதிமன்றம் சிறைத்தண்டனை 03

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# பெண் வைத்தியரை வன்கொடுமை செய்த முன்னாள் இராணுவச் சிப்பாய் இன்று கைது

### களவாடிய கைத்தொலைபேசி சந்தேகநபரைக் காட்டிக் கொடுத்தது



அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் பணி புரியும் பெண் வைத்திய ரைப் பாலியல் வன்கொ டுமை செய்த சம்பவத் துடன் தொடர்புடைய முன் னாள் இராணுவச் சிப்பாய் இன்று காலை கல்னேவ பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

இந்தத் தகவலைப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜே பால நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

சந்தேகநபரைக் கைது செய்வதற்காக 5 பொலிஸ் குழுக்கள்மற்றும்45விசேட அதிரடிப் படை அதிகாரி கள் நியமிக்கப்பட்டிருந்த னர். 05



# வன்கொடுமைக்குக் கண்டனம் தெரிவித்து நாடெங்கும் முடங்கின வைத்தியசாலைகள்!

### நோயாளர்கள் பெரும் அவதி

## நாளை காலை வரை பணிப்புறக்கணிப்புப் போராட்டம் தொடரும் என்று வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன், கி.வசந்தன்)

அனுராதபுரம் போதனா வைத் தியசாலையில் சேவையாற்றும் பெண் வைத்தியர் ஒருவர், முன் னாள் இராணுவச் சிப்பாய் ஒருவ ரால் கத்தி முனையில் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரி வித்து இன்று காலை 8 மணி முதல் 24 மணி நேர நாடு தழு விய பணிப்புறக்கணிப்புப் போராட் டத்தை அரச வைத்திய அதி காரிகள் சங்கம் முன்னெடுத்து வருகின்றது. 04



# கஜேந்திரகுமார் தலைமையில் புதிய கூட்டணி

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

## வடக்கு, கிழக்கில் சைக்கிளில் களமிறங்க முயற்சி

(எஸ்.நிதர்ஷன்)

"எங்கள் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துடன் பல தரப்பினரும் பேச்சுக்களை நடத்தி வருகின்றனர். அந்தப் பேச்சுகளில் ஒரு முன்னேற்றம் ஏற்படும் என்கின்ற நம்பிக்கை இருக்கின்றது. அதற்கமைய ஒரு புதிய கூட்டு அமைந்தாலும் எங்களுடைய "சைக்கிள்" சின்னத்தில் தான் வடக்கு, கிழக்கில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன."

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.



யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் போட்டியிடுவதற்கான கட்டுப்பணத்தை யாழ். தேர்தல் திணைக்களத்தில் இன்று செலுத்திய பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சைக்கிள் சின்னத்தில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள 17 உள்ளூராட்சி சபைகளிலும் போட்டியிடுவதற்கு இன்று கட்டுப்பணம் செலுத்தியுள்ளது.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான இந்தக் கட்சிக்கு எமது மக்கள் முழு ஆதரவை வழங்க வேண்டும் என்ற எதிர்பார்ப்போடு தேர்தல் பணிகளை ஆரம்பித்திருக்கின்றோம்.

எங்களுடைய கட்சி இன்று யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கட்டுப்பணம் செலுத்தியிருந்தாலும் தொடர்ந்து வடக்கு, கிழக்கு முழுவதும் கட்டுப்பணம் செலுத்தி வேட்புமனுக்களையும் தாக்கல் செய்யவுள்ளது.

எங்கள் கட்சியின் தலைவருடன் பல தரப்பினரும் பேச்சுக்களை நடத்தி வருகின்றனர். இந்தப் பேச்சு முயற்சிகளில் எங்கள் நிலைப்பாட்டை நாங்கள் தெளிவாகக் கூறி வருகின்றோம்.

குறிப்பாக தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் 13 ஆவது திருத்தச் சட்டம் நிராகரிக்கப்பட வேண்டும், நல்லாட்சி காலத்தில் கொண்டு வரப்பட்ட ஏக்கிய ராஜ்ஜிய என்ற ஒற்றையாட்சி வரைவு நிராகரிக்கப்பட வேண்டும், தமிழ் மக்கள் பேரவையால் தயாரிக்கப்பட்ட தீர்வுத் திட்டம் ஆகியவற்றோடு உடன்படக்கூடிய தரப்புகளோடு ஒன்றிணைந்து பயணிக்கக் கூடியதான கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன.

அந்தப் பேச்சுகளில் ஒரு முன்னேற்றம் ஏற்படும் என்கின்ற நம்பிக்கை இருக்கின்றது. அந்தத் தரப்புக்களோடு முழுமையான ஓர் இணக்கம் ஏற்பட்ட பின்னர் யார், யார் என்ற அந்த விவரங்களை அறிவிப்போம்.

அவ்வாறு ஒரு புதிய கூட்டு அமைந்தாலும் எங்களுடைய சைக்கிள் சின்னத்தில்தான் வடக்கு, கிழக்கில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், எம்முடன் இதுவரையில் பேசிய தரப்புக்கள் எமது இந்தக் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டுள்ளனர். எனினும், பேச்சுக்கள் தொடர்வதால் முழு விவரங்களையும் இப்போதைக்கு எம்மால் கூற முடியாவிட்டாலும் விரைவில் இந்தக் கூட்டு தொடர்பில் கட்சியின் தலைவர் அறிவிப்பார்." – என்றார்.

## வடக்கு, கிழக்கில் ஈ.பி.டி.பி. தனித்துப் போட்டி

(எஸ்.நிதர்ஷன்)

நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபைத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் ஈ.பி.டி.பி. வீணைச் சின்னத்தில் தனித்துப் போட்டியிடவுள்ளது என்று அந்தக் கட்சியின் ஊடகச் செயலாளர் பன்னீர்செல்வம் ஸ்ரீகாந் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் இன்று நடைபெற்ற வாராந்த ஊடக சந்திப்பில் இவ்வாறு தெரிவித்த அவர், மேலும் கூறுகையில்,



"ஈ.பி.டி.பி. தனது தனித்துவத்துடனேயே அனைத்து தேர்தல்களிலும் முகங்கொடுத்து வருகின்றது.

குறிப்பாக வடக்கின் ஐந்து மாவட்டங்கள், கிழக்கில் மூன்று மாவட்டங்கள் உள்ளடங்கலாக வடக்கு, கிழக்கில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஈ.பி.டி.பி. தனது சின்னமான வீணைச் சின்னத்தில் தனித்துப் போட்டியிடவுள்ளது.

அதனடிப்படையில் இந்தத் தேர்தலில் எமது மக்கள் எமது கட்சிக்கு அணி திரண்டு வாக்களித்து எம்மை வெற்றி பெறச் செய்வார்கள் என நம்புகின்றேன்." – என்றார்.



# யாழ். மாவட்டத்தின் 17 சபைகளிலும் களமிறங்க முன்னணி கட்டுப்பணம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் போட்டியிடுவதற்குத்தமிழ்த்தேசியமக்கள்முன்னணி கட்டுப்பணம் செலுத்தியுள்ளது.

யாழ். மாவட்டத்தின் 17 சபைகளிலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் “சைக்கிள்“ சின்னத்தில் போட்டியிடவுள்ளது.

இதற்கான கட்டுப்பணத்தைக் கட்சியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன், யாழ். தேர்தல் திணைக்களத்தில் இன்று காலை செலுத்தினார்.

இதேபோன்று வடக்கு, கிழக்கு முழுவதும் சைக்கிள் சின்னத்தில் தமது கட்சி போட்டியிடவுள்ளது எனவும், அதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் கஜேந்திரன் தெரிவித்தார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி



**வன்முறைக் கும்பலின்...**

விதித்துள்ளது.

யாழில் இயங்கிய வன்முறைக் கும்பல் ஒன்றின் தலைவர் எனக் கூறப்படும் நபரை, வன்முறைச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் பொலிஸார் தேடி வந்த நிலையில், கடந்த 2022ஆம் ஆண்டு உரும்பிராய் பகுதியில் மறைந்திருக்கின்றார் என்று பொலிஸாருக்குத் தகவல் கிடைக்கப் பெற்றது.

அந்தத் தகவலின் பிரகாரம் சம்பவ இடத்துக்குப் பொலிஸார் விரைந்த போது, மேற்படி நபர் கூரிய ஆயுதங்களைக் காட்டிப் பொலிஸாரை அச்சுறுத்தி விட்டு தப்பிச் சென்றார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்த நிலையில், சிறிது காலத்தில் அந்த நபரைப் பொலிஸார் கைது செய்து மன்றில் முற்படுத்தி வழக்கு விசாரணைகளை முன்னெடுத்து வந்தனர்.

அந்நிலையில் குறித்த வழக்கு நேற்று தீர்ப்புக்காகத் திகதியிடப்பட்டருந்த நிலையில், வழக்கு மன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது, மேற்படி நபர் மீதான குற்றச்சாட்டில் ஒன்றுக்கு 3 மாத கால கட்டாய சிறைத்தண்டனை விதித்த மன்று, ஏனைய குற்றச்சாட்டுக்களுக்கு 2 வருடங்கள் சிறைத்தண்டனை விதித்து, அதனை 10 வருட காலத்துக்கு ஒத்தி வைத்தது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

**வன்கொடுமைக்கு...**

இதனால் வைத்தியசாலைகளில் அவசர சேவைகள் தவிர்ந்த ஏனைய சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக நோயாளர்கள் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளனர். வைத்தியசாலைகளுக்கு இன்று சிகிச்சைக்கு வந்த நோயாளர்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

இதேவேளை, அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் பெண் வைத்தியரைப் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் இன்று காலை கைது செய்யப்பட்ட போதிலும், நாடளாவிய ரீதியில் இன்று முன்னெடுக்கப்பட்டுள்ள பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை கைவிடப்போவதில்லை என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்தப் பணிப்புறக்கணிப்பு நாளை காலை 8 மணி வரை தொடரும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.










## முதலாம் பக்கத் தொடர்ச்சி


**பெண் வைத்தியரை...**

பெண் வைத்தியரைப் பலாத்காரம் செய்த பின்னர், சந்தேகநபர், மேற்படி பெண் வைத்தியரின் இரண்டு கைத் தொலைபேசிகளில் ஒன்றைத் திருடிக் கொண்டு தப்பிச் சென்றிருந்தார்.

பெண் வைத்தியரின் கைத்தொலை பேசி ஏதோ ஒருவகையில் இந்தச் சந்தேகநபரைக் கைது செய்வதற்குச் சான்றாக இருந்தது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் கல்னேவவில் மறைந்திருந்தபோது அவரைப் பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப் படை அதிகாரிகள் குழுவினர் கைது செய்தனர்.

இதற்கு முன்னர் இந்தச் சந்தேகநபர் கெக்கிராவ பகுதியில் நடந்த 4 மில்லியன் ரூபா மதிப்புள்ள தங்க நகைகள் திருடப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.



வழக்கு ஒன்று தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மேற்படி சந்தேகநபர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முற்பகலே விடுவிக்கப்பட்டிருந்தார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நபர் இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் சந்தேகநபர் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளின் பட்டியலில் உள்ளாரா என்பது தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் வைத்தியராகப் பணிபுரியும் 32 வயதான பெண்ணே இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர் ஆவார்.

மேற்படி பெண் வைத்தியர் நேற்று முன்தினம் மாலை வைத்தியர் விடுதியில் வைத்துப் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அதானி குழும இழுபறி

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களில் முதலீடு செய்யும் இந்தியாவின் அதானி குழுமத்தின் எத்தனத்துக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் இணக்கமான நிலைப்பாடு வருவதான சாத்தியங்கள் தென்படவில்லை.

இலங்கையின் முன்னைய அரசோடு செய்து கொள்ளப்பட்ட உடன்பாட்டிற்கு இணங்க அதே விதிமுறைகளின் கீழ் பணியாற்றவே அதானி குழுமம் விருப்பம் தெரிவித்துள்ளது. அதில் விடாப்பிடியாகவும் இருக்கின்றது.

இலங்கையில் அதானி குழுமம் முதலீடு செய்யும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களின் மூலம் கிடைக்கும் மின்சாரத்தை கொள்வனவு செய்யும் விலை தொடர்பாகவே இப்போது இரண்டு தரப்புகளுக்கும் இடையில் இழுபறி நீடிப்பதாகத் தெரிகிறது.

முன்னைய அரசுடன் ஒரு கிலோ வாட் மணி நேர மின்சாரத்தை 8.26 டொலர் சதத்துக்கு விநியோகிக்க அதானி குழுமம் இணக்கம் கண்டிருந்தது. ஆனால் இலங்கையில் புதிதாக அதிகாரத்துக்கு வந்த தேசிய மக்கள் சக்தி அரசு அதனை ஆறு அமெரிக்க டொலர் சதமாகக் குறைக்க வேண்டும் என்று ஒற்றைக் காலில் நிற்கிறது.

இந்த இழுபறி காரணமாக இலங்கையில் தன்னுடைய முதலீட்டுத் திட்டங்களை கைவிட்டு வெளியேற அதானி குழுமம்ம் கோடிகாட்டி இருந்தது.

மன்னார் மற்றும் பூநகரியில் 484 மெகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி காற்றாலை பண்ணைகள் இரண்டை நிறுவுவதற்கு நீண்ட வாதப்பிரதிவாதங்கள், கலந்துரையாடல்களுக்குப் பின்னர் அதானி குழுமம் இணங்கியது. அதானி கிரீன் எனர்ஜி என்ற கம்பனி இதற்காக 442 மில்லியன் டொலர்களை முதலீடு செய்ய இருந்தது. அந்த மின்விநியோகப் பரிமாற்றக் கட்டமைப்பு உட்பட அனைத்துக்கும் அதானி குழுமமே முதலீடு செய்யும் என்று கூறப்பட்டது.

ஆனால் இணக்கம் காணப்பட்ட கட்டண அடிப்படையில் மின் விநியோகத்தைப் பெற்றுக் கொள்ளும் திட்டத்தை புதிய அரசு நிராகரித்து விட்டது. கடந்த ஆண்டு பழைய அரசு 484 மெகா வாட் திட்டத்துக்கான கட்ட ணத்தை யூனிட்டுக்கு 8.26 டொலர் சதத்துக்கு தீர்மானித்திருந்தது.

இந்தக் கட்டண இணக்கத்திற்கு எதிராக அப்போதே ஆர்வலர்கள் நீதிமன்றத்தில் வழக்கு த்தொடர்ந்து நீதியை நிலை நாட்ட வேண்டும் என்று கோரியிருந்தனர். அதே சமயம் இந்தத் திட்டங்களை முன்னெடுப்பதால் ஏற்படக்கூடிய சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்தும் ஆர்வலர்கள் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தமையினால் அதானியின் திட்டங்கள் சர்ச்சையில் சிக்கியுள்ளன.

அதானி குழுமத்தின் திட்டங்கள் தொடர்பில் புதிய அரசின் நிலைப்பாட்டில் மாற்றம் எதுவும் இல்லை என்று அரசு தரப்பு கூறுகிறது. அந்த மின் திட்டத்தின் கீழ் மின் கொள்வனவு நீதி, நியாயமான முறையில் நடக்க வேண்டும் என்பதே இலங்கை அரசாங்கத்தின் கருத்தாக உள்ளது.

விலை தீர்மானத்தில் இரு தரப்புகளும் 'விடாக் கண்டன், கொடாக் கண்டன்' நிலையில் உறுதியாக இருக்கின்றன என்று தெரிகிறது.

இந்த முரண்பாடுகள், குழப்பங்களைத் தாண்டி - இவ்விடயத்தை ஒட்டிய நீதி மன்ற வழக்குகளைச் சமாளித்து - திட்டம் முன்னெடுக்கப்படும் என்று நம்புவது துர்லபமே.

"அவர்கள்(அதானி குழுமத்தினர்) விலை திருத்தம் கொண்டு வந்தால், நாங்கள் விவாதிக்கத் தயாராக இருக்கிறோம். நாங்கள் ஒரு நிறுவனத்தையோ அல்லது ஒரு நாட்டையோ சார்ந்திருக்க வில்லை. பொதுமக்களுக்கு ஏற்படும் நன்மைகளைப் பொறுத்து நாங்கள் விவாதித்து எல்லாவற்றையும் முடிவு செய்வோம். எங்களுக்கு வேறு எந்த ஆர்வங்களும் இல்லை" என்று சுகாதார மற்றும் ஊடக அமைச்சரும் அரசாங்கப் பேச்சாளருமான நளிந்த ஜெயதிஸ்ஸ கூறுகின்றார்.

இந்தப் பின்புலத்தில் இந்த விவகாரம் சுமுகமாகத் தீர்வதற்கான வாய்ப்புகள் குறைவாகவே உள்ளன.



# உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் அம்பாறை முஸ்லீம் காங்கிரஸ் கலந்தாய்வு

(பாறுக் ஷிஹான்)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான விசேட கலந்துரையாடல் அம்பாறை மாவட்டத் தேர்தல் ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் நிஸாம் காரியப்பர் தலைமையில் ஒலுவில்தனியார் விடுதியில் நடைபெற்றது.

இதன்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தேசிய அமைப்பாளரும் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம். எஸ்.உதுமாலெப்பை, கட்சியின் பிரதித் தலைவர்களான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம். மன்சூர், சிரேஷ்ட சட்டத்தரணி எஸ். எம்.ஏ.கபூர், கட்சியின் பொருளாளரும் கல்முனை மாநகர சபையின் முன்னாள் பிரதி மேயருமான ரஹ்மத் மன்சூர், கட்சியின் பிரதிச் செயலாளர் மன்சூர். ஏ. காதர், கட்சியின் மாவட்ட செயலாளர் ஏ.சீ.சமால்தீன், உயர் பீட உறுப்பினர்



சப்றாஸ், அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில், பிரதேச உச்ச பீட உறுப்பினர்கள், மத்திய குழுக்களின் தலைவர்கள், உறுப்பினர்கள், மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.





# பொத்துவில் பிரதேச உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பான கலந்துரையாடல்

(பாறுக் ஷிஹான்)

அகில இலங்கை மக்கள் காங்கிரசின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அஷ்ரப் தாஹிர் பொத்துவில் பிரதேச முக்கியஸ்த்தர்களுடன் உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது எதிர்வரும் உள்ளூராட்சிமன்ற தேர்தல் வியூகங்கள் தொடர்பில் விரிவாக ஆராய்ந்ததுடன் கட்சியின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பிலும் வேட்பாளர்கள் தெரிவு சம்பந்தமாகவும் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது கட்சியின் உயர் பீட உறுப்பினர்கள், மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள், பொத்துவில் பிரதேச அமைப்பாளர், பொத்துவில் பிரதேச சபையின் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள், வட்டார அமைப்பாளர்கள், கட்சியின் முக்கியஸ்தர்கள் ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.



# கற்பிட்டி முகத்துவார கிராம மக்களின் பாதுகாப்பற்ற கடல்வழி படகுப் பயணம்

## சம்மந்தப்பட்ட அதிகாரிகளைக் கவனத்தில் கொள்ளுமாறு கோரிக்கை

(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)

கற்பிட்டி துறையடியில் இருந்து முகத்துவாரம் கிராமத்துக்கான சுமார் 800 மீற்றர் கடல்வழி போக்குவரத்தில் பல்வேறு சிரமங்களை இப்பகுதி மக்கள் எதிர்நோக்கி வருகின்றனர்.

கடல்வழிப் போக்குவரத்துச் சீர் செய்யப்படாமலும் பாதுகாப்பு அற்ற முறையிலும் காணப்படுகிறது. தரைவழிப் போக்குவரத்துக்கான மேம் பாலம் அமைக்கப்படாமல் நீண்ட நாள்களாக இழுத்தடிப்பு செய்யப்படுவதாகவும் முகத்துவாரம் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

துறையடியில் இருந்து முகத்துவாரம் நோக்கி இடம்பெற்று வரும் கடல்வழி போக்குவரத்து பாதுகாப்பு அற்ற நிலையிலேயே காணப்படுகிறது. இரு கரையிலும் நிரந்தரமான இறங்குதுறையும் அமைக்கப்படாது தற்காலிக பாதுகாப்பற்ற இறங்கு துறைகளே உள்ளன.

முகத்துவாரம் கிராமத்தின் டச்பே கிராம உத்தியோகத்தர் பிரிவில் சுமார் 400 குடும்பங்கள் வசித்துவருகின்றன. தமிழ் மொழி பாடசாலை மற்றும் சிங்கள மொழி பாடசாலை என இரண்டு பாடசாலைகள் காணப்படுகின்றன. பாடசாலைக்கான அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் என சகலரும் வெளி ஊர்களில் இருந்து முகத்துவாரத்துக்குப் பாதுகாப்பற்ற கடல்வழி படகு சேவை மூலமே தமது பயணத்தை மேற் கொண்டு வருகின்றனர்.

முகத்துவாரத்தில் உள்ள மாணவர்கள் தமது உயர் கல்வியை தொடர்வதற்கும் தினசரி இந்தப் பாதுகாப்பற்ற கடல்வழிப் பயணத்தையே மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.





இந்தப் பாதுகாப்பற்ற படகு சேவையை வருடா வருடம் ஒப்பந்த அடிப்படையில் சுமார் 08 லட்சம் ரூபாவுக்குக் கற்பிட்டி பிரதேச சபையின் மூலம் அனுமதி பெற்றுக்கொள்வதாக படகு சேவை நடத்துனர் தெரிவித்தனர். பயணிகள் படகை நிறுத்துவதற்கான நிறந்தர இறங்கு துறையை கூட அமைத்து தராது இழுத்தடிப்புச் செய்யப்படுவதாகவும் கவலை தெரிவிக்கின்றார்.

மீன்பிடி மற்றும் தெங்கு உற்பத்தி பொருளாதாரமாக கொண்டு விளங்கும் முகத்துவாரம் கிராம மக்களின் அத்தி யாவசிய சகல தேவைகள் நிமித்தமும் கற்பிட்டி நோக்கிய பாது காப்பற்ற சுமார் 800 மீற்றர் கடல்வழி படகு பயணத்தையையே நம்பி இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதுவிடயம் நாட்டில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்தின் வாயிலாக புதிய அரசு கவனத்தில் எடுத்து முகத்துவாரம் கிராம மக்களின் வாழ்வில் விடிவுக்கான மேம்பாலம் அமைக்கும் திட்டத்தை உடன் அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுள்ளனர்.




Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Harams
Haram NEK 318
Harams
Haram NEK 473
Harams
Haram NEK 477
Harams
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555



# உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நுவரெலியாவில் ஐக்கிய மக்கள் சக்தியோடு இணைய யோசனை!

## நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் தெரிவிப்பு

**(பொகவந்தலாவ எஸ். சதீஸ் )**

இலங்கை தொழிலாளர் காங்கிரஸும் தொழிலாளர் தேசிய சங்கமும் இதுவரை காலமும் மலையக மக்களுக்குக் குரல் கொடுத்தன என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

ஹட்டன் செனன் கே.எம். தோட்டத்தில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண பொருள்களை வழங்கி வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதி நிதிச்செயலாளரும் மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான எஸ்.ஸ்ரீதரன், இளைஞர் அணித் தலைவர் பா.சிவநேசன், பிரதிப் பொதுச் செயலாளர் கல்யாணகுமார் மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம், கடந்த காலங்களிலும் மக்களுக்காகவே நாங்கள் இரு தரப்பினரும் முரண்பட்டுக் கொண்டோம். தேசிய கட்சிகளுக்குக் கட்டுப்பாடு உள்ளது. அதனை மீறிச் செயற்பட முடியாது. நாமும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸும் மக்களுக்குச் சேவைகளை முன்னெடுத்திருக்கின்றோம். ஆனால் புதிதாக வந்த கட்சிகள் மக்களுக்கு எதுவும் செய்ததில்லை.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியோடு இணைந்து போட்டியிடுவதற்கு கலந்துரையாடி கொண்டிருக்கின்றோம். வெளிமாவட்டங்களில் தனித்துப் போட்டியிட பேசி கொண்டு இருக்கின்றோம். எமது கட்சியில் எவ்வித பிளவுகளும் இல்லை. நான் இராதகிருஷ்ணன் மற்றும் மனோகணேசன் ஆகியோர் இணைந்து தான் செயற்படுவோம்.

மலையகத்தை பொருத்தவரையில் மலையக மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகவே பேசி வருகிறோம். எனக்கும் ஜீவன் தொண்டமானுக்கும் சொந்த பிரச்சினைகள் எதுவும் கிடையாது. எமது ஆட்சிக் காலத்தில் காணி உரிமை முதல் காணி உறுதிப்பத்திரம்வரை பெற்றுக் கொடுத்துள்ளோம். பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 1700 ரூபா பெற்றுதருவதாக ரணில் விக்ரமசிங்க கூறி அது கிடைக்கவில்லை. ஒவ்வொரு முறையும் சம்பள பிரச்சினை இழுப்பறி நிலையில் உள்ளது. ஆகையால்தான் எமது நிலைப்பாடு பெருந்தோட்ட தொழிலாளர்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக மாற்றுவதே எமது நிலைப்பாடாக உள்ளது.

பொகவந்தலாவ மஸ்கெலியா போன்ற தூரபிரதேசங்களில் உள்ள மக்களுக்கு கடந்த காலங்களில் மிக தொலைவில் பிரதேச செயலகங்கள் காணப்பட்டன. அதனை இலகுபடுத்துவதற்காகவே நாம் எமது அரசில் பிரதேச செயலகங்களையும் பிரதேச சபைகளையும் அதிகரித்தோம். இந்த மக்கள் பிரதேச சபையைக் கைபற்ற எமக்கு வாய்ப்பு வழங்கவில்லை. ஆனால் மக்கள் மாற்றத்தை எதிர்பார்த்துள்ளார்கள். இருந்தாலும் பொறுத்திருந்து பார்ப்போம்.– என்றார்.





# பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் விடயத்தில் உடனடியான தீர்வைத் தாருங்கள்

## அபிவிருத்தி உத்தியோகத்தர் தொழிற்சங்கத் தலைவர் கபீர் கலீல் தெரிவிப்பு

(பாறுக் ஷிஹான்)

பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான தனியான சேவைப் பிரமாணக் குறிப்பை உருவாக்குவதற்கு சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகள் தீர்வைப் பெற்றுத் தர முன்வர வேண்டும் என்று அம்பாறை மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கத் தலைவர் கபீர் கலீல் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று தனியார் விடுதியில், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்மந்தமாக கலந்துரையாடலின் பின்னர் இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது,

அம்பாறை மாவட்டத்தில் அரச திணைக்களங்களில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்மந்தமாக பல்வேறு கலந்துரையாடல்கள் பல கட்டங்களில் எம்மால் நடத்தப்பட்டுள்ளன.

இதன்போது பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் இடமாற்றம் ரீதியான பிரச்சினை, சம்பளக் கட்டமைப்பை உருவாக்குதல் மற்றும் தொழில் கடமை ரீதியான விடயங்கள் மேலும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான தனியான சேவைப் பிரமானக் குறிப்பை உருவாக்குதல் போன்ற பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகள் உதவ முன்வர வேண்டும்.– என்றார்.

இந்தச் செய்தியாளர் சந்திப்பில் அகில இலங்கை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு தலைவர் சட்டத்தரணி அநுராத செனவிரத்தன, செயலாளர் வசந்த லங்கதிலக்க, தேசிய இணைப்பாளர் துமிந்த கண்டம்பி, அம்பாறை மாவட்டம் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தொழிற்சங்கச் செயலாளர் எம்.ஐ.எம். இஹ்லாஸ், இணைப்பாளர் எல்.எம். சர்ஜுன் உட்பட மாவட்டத்தில் உள்ள திணைக்களங்களுக்குப் பொறுப்பான இணைப்பாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# துறைநீலாவணை குளக்கரையில் தினமும் குவிக்கப்படும் குப்பைகள்!

## குடியிருப்பாளர்கள் அசௌகரியம்! யார் கவனிப்பது? மக்கள் திண்டாட்டம்!!

( வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட துறைநீலாவணை குளப் பகுதியில் தினமும் ஆடு, மாடு மற்றும் கோழிக் கழிவுகள் கொட்டப்பட்டு வருகின்றன.

குறிப்பாக பெரிய நீலாவணைச் சந்தியில் இருந்து துறை நீலாவணை நோக்கிச் செல்லும் பிரதான வீதியின் இடப்பக்கமுள்ள குளக்கரையில் தினமும் இத்தகைய குப்பைகள் இனந்தெரியாதோரால் கொட்டப்பட்டு வருகின்றன.

துறைநீலாவணைக் கிராமம் மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென்எருவில் பற்று பிரதேசத்திலுள்ள வருகிறது. ஆனால் இந்தக் கிராமத்துக்குச் செல்லும் பிரதான வீதியின் இடப் பக்கத்தில் உள்ள குளங்கள், வயல்கள் கல்முனை மாநகர சபைக்குள் வருகின்றன.

இதனால் இந்தக் குப்பை பிரச்சினையை யார் கவனிப்பது? யாரிடம் முறையிடுவது என்பது தொடர்பாக மக்கள் திண்டாட்டத்தில் உள்ளனர்.

அங்கு குப்பை கொட்ட வேண்டாம் என்று மண்முனை தென்எருவில் பற்று பிரதேச சபை அறிவித்தல் பலகை போட்டுள்ளது. எனினும் இது தொடர்கிறது.

அங்கு குப்பைப் பொதிகளை வீசிய போது ஒருவர் கையும் மெய்யுமாக இளைஞர்களால் பிடிக்கப்பட்டார். வீசிய குப்பைகளை மீள அள்ளச் செய்த இளைஞர்கள் அவரை எச்சரிக்கை செய்து அனுப்பி வைத்தனர்.



இதுபோன்ற சம்பவங்கள் இனமுறுகலையும் தோற்றுவிக்கும் அபாயம் உள்ளது எனக் கூறப்படுகிறது.

இதனால் அப்பகுதியில் உள்ள குடிமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களது குடும்பம் பாதிக்கப்பட்டுள்ளது. அந்தச் சூழல் பாதிக்கப்பட்டு மாசடைந்து கொண்டிருக்கின்றது.

இதனை அந்தப் பகுதிக் குடியிருப்பாளர்கள் பல தடவைகள் கல்முனை மாநகர சபையிடமும் பொதுச் சுகாதார பரிசோதகரிடமும் முறையிட்டும் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்று அங்குள்ள குடியிருப்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

குப்பைகள் கொட்டுவதை தடுப்பதற்கு கல்முனை மாநகர சபை அல்லது மண்முனை தென்எருவில் பற்று பிரதேச சபை நடவடிக்கை எடுக்குமா என்று அந்த மக்கள் கேட்கின்றனர்.




# வடக்கு மற்றும் தெற்கில் இருந்து கிழக்குக்கான தோழமை விஜயம்

(த.சுபேசன்)

சட்டம் மற்றும் சமூக நம்பிக்கைக்கான அமைப்பின் ஏற்பாட்டில் அண்மையில் வடக்கு மற்றும் தெற்கில் இருந்து கிழக்கு மாகாணத்துக்கான தோழமைப் பரிமாற்ற விஜயம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கிழக்கு மாகாணத்தின் ஹிங்குரனைப் பிரதேசத்தில் கரும்பு விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அக்கரைப்பற்று மக்களின் காணி உரிமைப் பிரச்சினை, கிழக்கு மாகாண முஸ்லிம் மக்கள் வனவளத் திணைக்களத்தால் எதிர்நோக்கும் பிரச்சினைகள், இராணுவ மயமாக்கல் செயற்பாடுகளால் கிழக்கு மாகாண மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டது.

இதன்போது வடக்கு மற்றும் தென் மாகாணங்களில் இருந்து ஊடகவியலாளர்கள், சட்டத்தரணிகள், திருநர் சமூகத்தினர், சமூக சேவகர்கள் பங்கேற்றிருந்தனர்.

சட்டம் மற்றும் சமூக நம்பிக்கைக்கான அமைப்பின் திட்டத்தின் கீழ் மேற்படி பரிமாற்ற விஜயங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

அந்த வகையில் கடந்த வருடம் வடக்கில் உள்ள சமூகத் தலைவர்களை தென் பகுதிக்கும் தென் பகுதியில் உள்ள சமூகத் தலைவர்களை வடக்கு மாகாணத்துக்கும் மக்களின் உரிமைகள் சார்ந்த பிரச்சினைகள் தொடர்பாக ஆராய பரிமாற்ற விஜயத்தில் இணைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




# 'கிளீன் ஸ்ரீலங்காவும் பாலின சமத்துவமும்' எனும் தொனிப்பொருளில் மகளிர் தினம்

(கி.வசந்தன்)

'கிளீன் ஸ்ரீலங்காவும் பாலின சமத்துவமும்' எனும் தொனிப்பொருளில் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வவுனியா காமினி மகா வித்தியாலயத்துக்கு முன்பாகக் கண்காட்சியும் போட்டி நிகழ்வும் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

வவுனியா தெற்கு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில், பிரதேச செயலாளர் காஞ்சன குமாரவின் தலைமையில் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.சுபாசினியின் ஒழுங்குகபடுத்தலில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வவுனியா மாவட்ட செயலாளர் பீ.ஏ.சரத் சந்திர, மேலதிக மாவட்ட செயலாளர் தி.திரேஸ்குமார், நா.கமலதாசன் (காணி) ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

வவுனியா மாவட்டத்தை சேர்ந்த அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு இடையிலான குறித்த கண்காட்சி மற்றும் போட்டி நிகழ்வில் 'கிளீன் ஸ்ரீலங்கா' வேலைத்திட்டம் தொடர்பாகவும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் அது தொடர்பான ஓவியங்களும், சாதனை பெண்கள் தொடர்பான படங்கள் உட்பட பல்வேறு விடயங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.







# ஆலயங்களுக்கு நிதியுதவி!

(தலவாக்கலை பி.கேதீஸ்)

கொட்டகலை ரொசிட்டா தோட்டத்தில் அமைந்திருக்கும் ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலய கும்பாபிஷேகத்துக்கு 5 லட்சம் ரூபா நிதியும் கொட்டகலை டிரைட்டன் தோட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்துக்கு 7 லட்சம் ரூபா நிதியும் இந்து ஆலய புணருத்தாரன நம்பிக்கை நிதியத்தால் ஆலய நிர்வாக சபையினரிடம் கையளிக்கப்பட்டது.

இதன்போது நிதியத்தின் தலைவர் சதீஸ்வரன், செயலாளர் நடராஜ், ஆலோசகர்களான விஜயபாலன், கதிர்காமர், சஞ்சீவி , வடிவேல் ஆகியோர் கலந்து கொண்டனர்.





# பொகவந்தலாவ ஆஸ்பத்திரிக்கு உபகரணங்கள் கையளிப்பு!

(பொகவந்தலாவ எஷ்.சதீஷ்)

கெயார் லங்கா நிறுவனத்தின் ஊடாக பொகவந்தலாவ பிர தேச வைத்தியசாலைக்குத் தேவையான உபகரணங்கள் கையளிக்கப்பட்டன. கெயார் லங்கா நிறுவனத்தின் பொருளாளர் கணேசன் இளையராஜாவால் இந்த உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த பொகவந்தலாவ பிரதேச வைத்தியசாலைக்கு தூர பிரதேசங்களில் உள்ள தோட்ட மக்கள் நாளாந்தம் சிகிச்சையைப் பெற்றுக்கொள்வதற்கு வருகை தருகின்றனர்.

இந்த நிலையில் இந்த வைத்திய சாலைக்கு இரண்டரை லட்சம் பெறுமதியான தள்ளுவண்டி, சக்கர வண்டி அழுத்ததன்மையைப் பரிசோதிக்கும் இயந்திரம் என்பன வைத்தியசாலையின் நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பொகவந்தலாவ பிரதேச வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி ஏ.எஷ்.கே ஜயசூரிய, கெயார் லங்கா நிறுவனத்தின் பொருளாளர் கணேசன் இளையராஜா, வைத்தியசாலையின் உத்தியோகத்தர்கள், பொகவந்தலாவ பொலிஷார் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# சுகாதார அமைச்சின் செயலாளர் பொத்துவில் வைத்தியசாலைக்கு!

(றியாஸ் ஆதம்)

சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் அனில் ஜயசிங்க பொத்துவில் ஆதார வைத்தியசாலைக்கு விஜயம் செய்தார். விசேட அவதானிப்பு விஜயமொன்றை மேற்கொண்டிருந்த செயலாளர் வைத்தியசாலை விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களை பார்வையிட்டார். சீன அரசின் நிதியுதவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய கட்டடத்தையும் பார்வையிட்டார்.

அத்துடன் கட்டணம் செலுத்தும் விடுதி, அவசர சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றையும் பார்வையிட்ட செயலாளர் வைத்தியசாலை அபிவிருத்தி தொடர்பில் வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினருடனும் கலந்துரையாடினார்.

கட்டணம் செலுத்தும் விடுதி, அவசர சிகிச்சைக்கான பொது வைத்திய நிபுணர், சத்திர சிகிச்சை நிபுணர் உட்பட வைத்தியசாலையில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புதல், அறுகம்பே பிரதேசத்தில் ஆயுள்வேத மருத்துவ வசதிகளை ஏற்படுத்துதல், அம்பாறை பொது வைத்தியசாலையின் மேலதிக உதவியுடன் பொத்துவில் ஆதார வைத்தியசாலையை உல்லாச பிரயாணிகளுக்கான மருத்துவ வசதி விரிவாக்கம் என பல்வேறு கோரிக்கைகளை வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினர் செயலாளரிடம் முன்வைத்தனர்.

அத்துடன்வைத்தியசாலைஅபிவிருத்திக்கு உதவி செய்துவரும் சுகாதார அமைச்சருக்கும் இதன் போது நன்றி தெரிவித்த அபிவிருத்திக் குழுவினர், அமைச்சரை சந்திப்பதற்கான ஒழுங்குகளை செய்து தருமாறும் செயலாளரிடம் கேட்டுக்கொண்டர்.

இந்த நிகழ்வில் சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகள், அம்பாறை பிராந்திய பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ், அம்பாறை மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் சந்திரசேன, பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் நிதின் றனவக்க, வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவின் தலைவர் டாக்டர் உவைஸ் பாரூக் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



# சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் மகளிர் தின நிகழ்வுகள்

(எஸ்.அஷ்ரப்கான்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் 'சர்வதேச மகளிர் தின நிகழ்வு' கல்முனை அல்-ஜலால் வித்தியாலய கேட்போர் கூடத்தில் பொலிஸ் நிலைய பொலிஸ் சார்ஜன் எஸ்.ரி.பாறூக் (43890) தலைமை மற்றும் வழி நடத்தலில் நடைபெற்றது.

இங்கு சாய்ந்தமருது பிரதேச செயகத்துக்கு உட்பட்ட மகளிர் மகா சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எல்.சம்சுதீன் மற்றும் விசேட அதிதியாக பெண் பொலிஸ் உத்தியோகத்தர் சஞ்ஜீவனி (7834) ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் பொலிஸ் சார்ஜன் எஸ்.ரி.மக்பூல் (43383), சாய்ந்தமருது பிரதேச செயக மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல்.முஸ்பிறா, உளவளத்துணை உத்தியோகத்தர் எஸ்.எச்.எம்.சியாம் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இம்முறை ' பெண்கள் உரிமைகள் குறித்து விழிப்புடன் இருப்போம் ' என்ற தொனிப்பொருளில் சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்பட்டது.



இங்கு மகளிர் மகா சங்க செயலாளர் ஏ.ஜே.மர்ஜானா பெண்கள் தொடர்பான கவிதை வாசித்தார்.

மேலும் வீட்டு வன்முறை பால்நிலை சமத்துவம் மற்றும் மகளிர் தின நிகழ்வு தொடர்பான விழிப்புணர்வு மகளிர் பற்றிய சட்டங்கள், குற்றங்கள், பாதிப்பு மற்றும் போதைப் பொருளால் சீரழியும் குடும்பங்கள் பற்றிய விழிப்புணர்வு உரை உட்பட பல நிகழ்வுகள் இடம்பெற்றன.



# தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலய முகவாயில் புதுப்பொலிவு பெற அடிக்கல்!

(வி.ரி.சகாதேவராஜா)

திருக்கோவில் வலயத்திலுள்ள தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்தின் நுழைவாயிலின் முகப்பு தோற்றத்தை மாற்றி அமைப்பதற்காக புதிய நுழைவாயிலுக்கான அடிக்கல் நாட்டு விழா அதிபர் கே.கங்காதரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அதற்கு நிதியுதவி வழங்கிய பிரபல சமூக செயற்பாட்டாளரும் கல்முனை ரோட்டரி கழகத்தின் முன்னாள் தலைவருமான பொறியியலாளர் சுந்தரலிங்கம் சசிகுமார் பிரதம அதிதியாக கலந்து கொண்டு அடிக்கல் நட்டு வைத்தார் .

முன்னாள் அதிபர்கள், ஊர்ப் பிரமுகர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை நிர்வாகத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

அத்தோடு வேலைகளை உடனடியாக ஆரம்பிக்கும்படி



ஒரு தொகை பணமும் தொழிலதிபர் சசிகுமாரால் வழங்கிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# முன்பள்ளிக்குத் தளபாடங்கள் வழங்கல்

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

தேசிய மக்கள் சக்தியின நாடாளுமன்ற உறுப்பினரும், கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் பிரதியமைச்சரும், அம்பாறை மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான வசந்த பியதிஸ்ஸ எம். பியின் பண்முகப்படுத்தப்பட்ட நிதியுதவி கீழ் முன்பள்ளிக்கு தள பாடங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

சென்னல் சாஹிரா முன்பள்ளிக்குத் தளபாடங்கள் வழங்கும் நிகழ்வு தேசிய மக்கள் சக்தியின் சம்மாந்துறை தொகுதி அமைப்பாளர் வை.எம். நவாஸ் தலைமையில் நடைபெற்றது.

இதன் போது, பாடசாலை அதிபர் சிப்னாவிடம் பல லட்சம் பெறுமதி வாய்ந்த தளபாடங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில், சம்மாந்துறை மல்கம்பிட்டி வட்டார தலைவரும் சமூக சேவையாளருமான எஸ்.எம்.ஏ. மஜீத், மல்கம்பிட்டி வட்டார உப தலைவரும் செயற்குழு உறுப்பினருமான ஏ.எம். ஹினாயத்துல்லாஹ், மல்கம்பிட்டி வட்டார செயற்குழு உறுப்பினர்களான ஏ.எம். பாரூக், ஐ. அபூபக்கர், எம்.எம். ஷிப்னாஸ், பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# புனரமைக்கப்பட்ட மலசல கூடம் கையளிப்பு

**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின் நிதி அனுசரணையில் அக்கரப்பத்தனை டொரிங்டன் தமிழ் வித்தியாலயத்துக்கு உட்கட்டமைப்பு வசதிகள், குடிதண்ணீர் வசதி மற்றும் மலசல கூடங்கள் மீள புனரமைப்புச் செய்யப்பட்டு மாணவர்களின் பாவனைக்காகக் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின் சார்பாக ஏகாம்பரம், பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துக்கொண்டனர்.



# கிராம அபிவிருத்திக்கு அட்டாளைச்சேனை தெரிவு!

**(எம் எப். நவாஸ் )**

கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சால் முன்னெடுக்கப்படும் ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தி திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக அட்டாளைச்சேனை பிரதேச செயலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட ஆலங்குளம் கிராமத்தில் அமைச்சு மட்டத்திலான கள ஆய்வு இடம்பெற்றது.

இவ் ஆய்வின் போது அமைச்சின் மேலதிக செயலாளர் தலைமையிலான உயர் அதிகாரிகள், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர், அம்பாறை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட மற்றும் பிரதேச உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள், பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர், பிரதேச கால்நடை மருத்துவர், நன்னீர் மீன்பிடி போதனாசிரியர், கிராம மட்ட உத்தியோகத்தர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள், கிராம சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் கிராம மக்கள் என பலர் கலந்துகொண்டனர். இந்தத் திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக தெரிவு செய்யப்பட் டுள்ள ஆலங்குளம் கிராம அலுவலர் பிரிவுக்கு 10 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வறுமை ஒழிப்பை நோக்க மாக கொண்ட வாழ்வாதார வேலைத்திட்டங்கள் இடம்பெறவுள்ளன.



# தமிழ், முஸ்லிம் மக்களிடையே பிளவை ஏற்படுத்த வேண்டாம்!

## சபையில் ஹிஸ்புல்லாஹ் எம்.பி. தெரிவிப்பு

(எஸ். சினீஸ்கான்)

நாடாளுமன்றில் தனக்கு இருக்கும் உரிமையை பயன்படுத்தி முஸ்லிம் சமூகத்துக்கு எதிராகவும் மார்க்கத்துக்கு எதிராகவும் பேசுபவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் கேட்டுக் கொண்டார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டம் தொடர்பாக அவ்வப்போது பேசப்பட்டுவருகின்றன. அதில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றால் அது தொடர்பில் முஸ்லிம் கலாச்சார திணைக்களம், ஜம்மியதுல் உலமா, நீதி அமைச்சு முஸ்லிம் எம்.பிக்கள், அரச தரப்பினருடன் அதனை கலந்துரையாடி மேற்கொள்ள முடியும்.



அவ்வாறு இல்லாமல் முஸ்லிம் சமூகத்தை தூண்டும் வகையில் அது தொடர்பில் கருத்துத் தெரிவிப்பதற்கு இடமளிக்கக்கூடாது. இது தமிழ், முஸ்லிம் மக்களிடையில் பிளவை ஏற்படுத்தக்கூடும்.

அதைவிடுத்து, நாடாளுமன்றில் முஸ்லிம்களின் மனதை புண்படுத்தும் வகையில் பேசிவிட்டு, அது சார்பில் அவர்கள் விளக்கங்களை கேட்கையில், மிகவும் மோசமாகவும் கேவலமாகவும் அறிக்கைகளை வெளியிடுவது தமிழ் மக்களிடத்திலும் முஸ்லிம் மக்களிடத்திலும் பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்தும்.

அதேபோன்று, தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் வைத்திய, சட்ட மற்றும் சுற்றுலா பீடங்களை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். பொத்துவில் பிரதேசத்துக்குத் தனியான கல்வி வலயம் ஒன்றை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்றார்.



# அச்சுவேலி மத்தியகல்லூரியின் மாணவர் நாடாளுமன்ற அமர்வு!

யாழ். அச்சுவேலி மத்திய கல்லூரியின் மாணவர் நாடாளுமன்ற கலைக்கும் அமர்வு கல்லூரியின் தியான அரங்கில் இடம்பெற்றது.

நிகழ்வில் விருந்தினர்கள் மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டு மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வு ஆரம்பமானது.

சபாநாயகர் செல்வன் சகீன் மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டார். பிரதமர் செல்வி திவ்யா வாசுதேவனின் உரை இடம்பெற்றது. அமைச்சர்கள் தங்களது பிரேரணைகளை சபையில் முன்வைத்தனர்.

பின்னர் அடுத்த புதிய நாடாளுமன்ற அமர்வானது இரண்டாம் தவணையில் நடைபெறும் என சபாநாயகர் அறிவித்ததுடன் நிறைவுற்றது.

கல்லூரியின் முதல்வர் நா.மகேந்திரராசா தலைமை தாங்கிய இந்நிகழ்வு பாடசாலை மட்டத்தில் இடம்பெற்றது. இதில் பிரதி அதிபர் ராஜிதுரேஸ் ராம், ஆசிரியர்கள் ஜெயதரன், திருமதி இராகுலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



இந்நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வை அச்சுவேலி மத்திய கல்லூரி அதிபர் நா. மகேந்திரராசா ஏற்பாடு செய்திருந்தார்.





# மன்னார் செயலகத்தின மகளிர் தினம்; பெண் சாதனையாளர்கள் கௌரவிப்பு!

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

'நிலையான எதிர்காலத்தை உருவாக்குவதற்காக அவள் வலுவான வழிகாட்டியாக இருப்பாள்' எனும் தொனிப்பொருளில் மன்னார் மாவட்டச் செயலகம் ஏற்பாடு செய்த சர்வதேச மகளிர் தின நிகழ்வு இன்று புதன்கிழமை (12) மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் கௌரவ விருந்தினராக ஓய்வு பெற்ற மன்னார் மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சிறிரங்கநாயகி கேதீஸ்வரன் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக நானாட்டான் பிரதேசச் செயலாளர் திருமதி கனகாம்பிகை சிவசம்பு கலந்து கொண்டடார். மாவட்டச் செயலக பணியாளர்களும் கலந்து கொண்டனர்.

இதன் போது மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு நினைவுச் சின்னம் மற்றும் பரிசில்கள் விருந்தினர்களால் வழங்கி கௌரவிக்கப்பட்டது. மன்னார் தோட்டவெளி கிராமத்தைச் சேர்ந்த மாணவி யேசுதாசன் யதுசிகா ஈட்டி எறிதல் போட்டியில் தேசிய ரீதியில் முதல் இடத்தைப் பெற்றுக் கொண்டமையால் அவருக்கு சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு 'மன் ஆற்றல் வீராங்களை' என்னும் விருது மற்றும் பரிசுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

கௌரவ விருந்தினராக கலந்து கொண்ட ஓய்வு பெற்ற மன்னார் மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சிறிரங்கநாயகி கேதீஸ்வரனின் சேவையை பாராட்டி விசேடமாக கௌரவிக்கப்பட்டார்.













# மார்ச் 14 முதல் விஜய்க்கு 'வை' பிரிவு பாதுகாப்பு



எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் த.வெ.க. தலைவர் விஜய்க்கு ஒய் பிரிவு பாதுகாப்பு வழங்கப்படவிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியாவில் உள்ள அரசியல் கட்சித் தலைவர்கள், தொழிலதிபர்கள், நடிகர்கள், பிரபலங்களுக்கு உளவுத் துறையின் அறிக்கையின் அடிப்படையில் மத்திய அரசு 'வை', 'இசட்' எனப் பல்வேறு பிரிவுகளின்கீழ் பாதுகாப்பு வழங்குகிறது. அந்த வகையில் த.வெ.க. தலைவர் விஜய்க்கு 'வை' (Y) பிரிவு பாதுகாப்பு அளிக்க மத்திய உள்துறை அமைச்சகம் கடந்த மாதம் உத்தரவிட்டது.

அதன்படி, எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முதல் விஜய்க்கு வை பிரிவு பாதுகாப்பு வழங்கப்பட இருப்பதாகத் தெரிகிறது. இதன்படி 8 முதல் 11 பேர் கொண்ட துப்பாக்கி ஏந்திய மத்திய ரிசர்வ் படையைச் சேர்ந்த கொமாண் டோக்கள் சுழற்சி முறையில் விஜய்யின் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுவார்கள். த.வெ.க. தலைவர் விஜய், சுற்றுப்பயணம், மாநாடு போன்றவற்றை திட்டமிட்டிருக்கும் நிலையில், கொமாண்டோக்கள் விஜய்க்கு பாதுகாப்பு வழங்கவுள்ளனர்.





# உத்தரபிரதேசத்தில்ல் பிரபலமாகும் மயான ஹோலி: நாகா துறவிகள் உள்ளிட்ட 10,000 பேர் பங்கேற்பு

உத்தரப் பிரதேசம் வாராணசியில் துறவிகளால் கொண்டாப்படும் மயான ஹோலி பிரபலமாகி வருகிறது. மணிகன்கா காட்டில் நடைபெற்ற 2 ஆவது நாள் நிகழ்ச்சியில் அகோரி, நாகா துறவிகளுடன் சுமார் 10,000 பொது மக்களும் இணைந்து ஹோலி கொண்டாடினர்.

வட மாநிலங்களில் மார்ச் 14 ஆம் திகதி கொண்டாடப்பட உள்ள ஹோலி பண்டிகை மிகவும் முக்கியமானது. இது ஒரு வாரம் முதல் 10 நாள்கள் வரை ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு வகையாக முன்கூட்டியே துவக்கப்படுகிறது. இந்த வகையில், திங்கள்கிழமை வந்த ரங்பர்னி ஏகாதேசி தினத்தன்று உத்தரப் பிரதேசத்தில் ஹோலி துவங்கியது. இதற்கு அந்த நாளில்தான் இங்குள்ள பழம்பெரும் காசி விஸ்வநாதர் கோயிலில் சிவ லிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டதாக நம்பிக்கை உள்ளது.

உத்தரப் பிரதேசத்தில் இதற்கும் இரண்டு நாள் முன்னதாக மதுராவில் லாட்மார் (தடியடி) ஹோலி துவங்கி விட்டது. இதை மாநிலத்தின் முதல்வர் யோகி ஆதித்யநாத் துவக்கி வைத்திருந்தார். ரங்பர்கி ஏகாதேசியில், வாராணசியின் இரு பெரும் மயானங்களில் துறவிகளால் ஹோலி கொண்டாடும் வழக்கம் துவங்கி விட்டது. இந்த வகை ஹோலி நாகா மற்றும் அகோரி துறவிகளால் புதிதாகக் கொண்டாடத் துவங்கி இருப்பதாகக் கருதப்படுகிறது.

இது குறித்து வாராணசி ஆட்சியரான எஸ்.ராஜலிங்கம் கூறும்போது, "ஐதீகத்தில் இடம்பெறாத இந்த மயான ஹோலி சுமார் பத்து வருடங்களாகக் கொண்டாடப்படுகிறது. பொதுமக்களுடன் வெளிநாட்டவர்களும் இதை வேடிக்கை பார்க்க திரளாக வருகின்றனர். இதனால், மயான ஹோலிக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் ஒவ்வொரு வருடமும் அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது" எனத் தெரிவித்தார்.

இந்த மயான ஹோலி திங்கள்கிழமை, கங்கை கரையின் பிரபலமான ஹரிச்சந்திரா காட் மயானத்தில் கொண்டாடப்பட்டது. இதன் மறுநாளான செவ்வாய்க்கிழமை பிரதோஷத்தை முன்னிட்டு இரண்டாவது நாளும் மயான ஹோலி, வாராணசியில் மட்டும் கொண்டாடப்பட்டது.



இந்த மயான ஹோலியில் நாகா மற்றும் அகோரி துறவிகள் மட்டுமே கலந்து கொள்ளத் துவங்கினர். ஆனால், இதை வேடிக்கை பார்க்க மட்டும் வரத் துவங்கிய பொதுமக்கள், சில ஆண்டுகளாக அகோரி, நாகா துறவிகளுடன் இணைந்து ஹோலி கொண்டாடத் துவங்கியுள்ளனர்.

இந்த வகையில், மயான ஹோலி இரண்டாவது நாளில் மேலும் சுமார் பத்தாயிரம் பேர் கலந்து கொண்டனர். காசி விஸ்வநாதர் கோயிலுக்கு இடதுபுறம் மணிக்கன்கா காட்டும், வலதுபுறம் ஹரிச்சந்திரா காட்டும் கங்கை கரையில் அமைந்துள்ளன.

மயான ஹோலியின் முதல் நாளை போல் நேற்று செவ்வாய்க்கிழமையும் மணிகன்கா காட்டில் மயான ஹோலி கொண்டாடப்பட்டது. இதில், காசி விஸ்வநாதர் கோயிலில் இருந்து சிறிய, பெரிய உடுக்கைகளை அடித்தபடி, ஊர்வலமாக மணிகன்கா காட்டில் நாகா, அகோரி துறவிகள் நுழைந்தனர்.

பிறகு மயானதில் எரிந்த உடல்களின் சாம்பல்களை ஒருவர் மீது மற்றவர் தடவியும், தூவியும் ஹோலி விளையாடினர். இவர்களுடன் மயான சாம்பலின் ஹோலி விளையாட்டில் பொதுமக்களும் கலந்து கொண்டனர். இவர்களில் சில அகோரி துறவிகள், எரிந் தும் அணையாமல் நெருப்புடன் இருந்த சாம்பலையும் தைரியமாகத் தூவி ஹோலி கொண்டாடினர்.




# பாகிஸ்தானில் கடத்தப்பட்ட ரயில்: 16 தீவிரவாதிகள் சுட்டுக் கொலை

பாகிஸ்தானில் பயணிகள் ரயிலை தீவிரவாதிகள் நேற்று சிறைபிடித்தனர்.

அதில் பயணம் செய்த 30 பாதுகாப்புப் படை வீரர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

500 இற்கும் மேற்பட்ட பயணிகள், பணயக் கைதிகளாகத் தடுத்துவைக்கப்பட்டனர்.

உலகளவில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்திய இந்தச் சம்பவத்தில் தற்போதைய நிலவரப்படி 16 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

பணயக் கைதிகளாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ள 104 பேர் மீட்க்கப்பட்டுள்ளனர்.

ஏனைய பயணிகளை மீட்கும் நடவடிக்கையில் பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது. அனைத்து பணயக் கைதிகளும் பாதுகாப்பாக மீட்க்கப்படுவார்கள் என அந்த நாட்டு இராணுவம் தெரிவித்துள்ளது.








# போர் நிறுத்தம் தொடர்பில் அமெரிக்காவின் முன்மொழிவை ஏற்பதற்குத் தயார்: உக்ரைன்

30 நாள்களுக்குத் தற்காலிக போர் நிறுத்தத்தை அமுல்படுத்துவதற்கான அமெரிக்காவின் முன்மொழிவை ஏற்பதற்குத் தயாரென உக்ரைன் தெரிவித்துள்ளது.

சவுதி அரேபியாவில் அமெரிக்காவுடன் நேற்று இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து, உக்ரைன் இந்த அறிவிப்பை விடுத்துள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நேர்மறையான திட்டத்துக்கு ரஷ்யாவை ஒப்புக் கொள்ள வைப்பது தற்போது அமெரிக்காவின் பொறுப்பாகும் என உக்ரைன் ஜனாதிபதி வொளாடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உக்ரைனின் இந்த இணக்கப்பாடு தொடர்பில் ரஷ்யாவுக்கு எடுத்துரைக்கப்படும் என நேற்றைய பேச்சுவார்த்தையில் பங்கேற்றிருந்த அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் மார்கோ ரூபியோ தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த திட்டத்தை ரஷ்யா ஏற்றுக் கொள்ளும் என நம்புவதாகவும் அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் மார்கோ ரூபியோ குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான பின்னணியில் உக்ரைனுக்கான உளவுத்துறை மற்றும் பாதுகாப்பு உதவிகளை உடனடியாக மீண்டும் வழங்குவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

கனடா முரசு
புதன்கிழமை 12/03/2025

**கனடாவில் முகநூலின் ஊடாக மோசடியில் ஈடுபட்டவர் கைது**

கனடாவில் முகநூலில் ஊடாக மோசடியில் ஈடுபட முயற்சித்த நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். ஸ்கார்பரோவைச் சேர்ந்த ஒரு நபர் ஒருவரே

02▶

# நாற்காலியுடன் நாடாளுமன்றிருந்து வெளியேறினார் ஜஸ்டின் ட்ரூடோ

**கனடா நாடாளுமன்றத்திலிருந்து தனது நாற்காலியுடன் நாக்கை நீட்டிய படி ஜஸ்டின் ட்ரூடோ வெளியேறிய புகைப் படம் இணையத்தில் வைரலாகி வருகிறது.**

**வட அமெரிக்க நாடான கனடாவின் பிரதமராக இருந்த ஜஸ்டின் ட்ரூடோ, கடந்த ஜனவரியில், தன் பதவியை பதவி விலகல் செய்தார்.**

**இந்த ஆண்டு தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், மக்களின் செல்வாக்கை இழந்ததால், கட்சியின் ஒரு பிரிவினர் நெருக்கடியைத் தொடர்ந்து அவர் பதவி விலகல் செய்தார்.**



கட்சிக்கு புதிய தலைவரைத் தேர்ந் தெடுக்கும் வரை, பிரதமராக அவர் தொடருவார் என ஏற்கனவே அறிவிக் கப்பட்டிருந்தது.

ஒரு மாதத்துக்கு மேலாக நடந்த பல கட்ட ஆலோசனைகளைத் தொடர்ந்து, கட்சியின் தலைவராக மார்க் கார்னி தேர்வு செய்யப்பட்டார்.

அடுத்த சில நாள்களில் அவர் பிரதமராகப் பதவியேற்க உள்ளார். இந்நிலையில், புதிய பிரதமராகப் பதவியேற்க உள்ள மார்க் கார்னியை ஜஸ்டின் ட்ரூடோ சந்தித்தார்.

இந்நிலையில், அவர் நாடாளுமன் றத்திலிருந்து தனது நாற்காலியுடன் நாக்கை நீட்டியபடி வெளியேறினார். இந்த புகைப்படம் தற்போது இணை யத்தில் வைரலாகி வருகிறது.



# இரட்டிப்பாக்கப்பட்ட கனடா மீதான வரி

## ட்ரம்பின் அதிரடி அறிவிப்பு

கனேடிய ஸ்டீல் மற்றும் அலுமி னியம் மீதான வரியை 25 வீதம் முதல் 50 வீதம் வரை இரட்டிப்பாக்கப் போவ தாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

கனடா மற்றும் அமெரிக்கா இடை யேயான வர்த்தகப்போர் ஆழமடைந்து வருகின்றது.

கனடா, அமெரிக்க மாநிலங்களுக்கு அனுப்பும் மின்சாரத்தின் மீது 25 வீத வரி விதித்தது.

இதற்கு பதிலடி அளிக்கும் வகை யில் ஸ்டீல் மற்றும் அலுமினியம் மீதான கனேடிய பொருள்களுக்கான வரியை இரட்டிப்பாக்க அமெரிக்கா தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட் டுள்ளது.

பதிலுக்கு, கனடாவின் புதிய பிரத மர் மார்க் கார்னி நாங்கள் பின் வாங்கப்போவதில்லை என தெரி வித்துள்ளார்.

ஜஸ்டின் ட்ரூடோ, அமெரிக்காவுட னான வரி விதிப்பு பிரச்சினையை பயன்படுத்தி மீண்டும் கனடா பிரத மராக முயற்சிக்கிறார் என அண் மையில் ட்ரம்ப் குற்றம் சாட்டியிருந் தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# கனடாவில் வீட்டு வாடகை தொகை ஐந்தாவது மாதமாகவும் குறைந்தது

கனடாவில் வீட்டு வாடகைகள் தொடர்ந்து ஐந்தாவது மாதமாக குறைந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

Rentals.ca மற்றும் Urbanation வெளியிட்ட அறிக்கையின்படி, பெப்ரவரியில் வாடகைகள் 4.8 வீதம் வீழ்ச்சி கண்டுள்ளது. அதன்படி, பெப்ரவரி மாதத்தின் சராசரி வாடகை 2,088 டொலராக குறைந்துள்ளது. இது ஏப்ரல் 2021 இற்கு பின்னர் பதிவான அதிகளவு வாடகைத் தொகை குறைவு இது வென்பது குறிப் பிடப்படுகிறது.

கட்டுமானம் அதிகரித்துள்ளதால் வீடுகள் அதிகளவில் நிரம்பல் செய்யப் பட்டுள்ளதாகவும், மக்கள்தொகை வளர்ச்சி மந்தமாகியுள்ளதாகவும் இத னால் வாடகை குறைந்துள்ளது என வும் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்காவுடன் வர்த்தக போர் காரணமாக பொருளாதார சிக்கல்கள் உருவாகியுள்ளமையும வாடகை வீழ்ச் சிக்கான முக்கிய காரணம் என தெரி விக்கப்படுகின்றது.

ஒண்டாரியோ மாகாணத்தில் அதிகபட்ச வாடகைத் தொகை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

அடுக்குமாடி வாடகை 4.2 வீதம் குறைந்து 2,329 டொலர்களாகவும், பிரிட்டிஷ் கொலம்பியா மாநிலத்தில் 1 வீத வீழ்ச்சி கண்டு 2,457 டொலர்களாகவும் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், சராசரி வாடகை தொகை இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் காணப்பட்டதை விட 5.2 வீத அதிகம் எனவும், கொவிட் காலத்துடன் ஒப்பீடு செய்யும் போது 16.9 வீதம் உயர்வினை யும் பதிவு






# போமன்வில்லில் இடம்பெற்ற தீ விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

போமன்வில்லின் மையப்பகுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த தீயால் பல குடியிருப்புகளும் வணிக நிறுவனங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த தீவிபத்தில் ஒருவர் காணாமல் போயிருந்த நிலையில், அவரது உடல் கண்டுபிடிக்கப்பட்டதாக டர்ஹாம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கட்டடத்தின் முதலாம் மாடியில் வணிகக் கட்டடங்கள் இருந்த நிலையில், மேலே இரண்டு மாடிகளில் குடியிருப்புகள் இருந்தன.

தீ மூன்றாவது மாடியில் உள்ள குடியிருப்பில் ஏற்பட்டநிலையில். வேகமாக அனைத்து இடங்களுக்கும் பரவியுள்ளது.

தீயணைப்பு படையினர் மீட்பு பணிகளை மேற்கொண்டனர்.

உடனடியாக கட்டடத்தில் தங்கியிருந்த அனைத்து குடியிருப்பாளர்களும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர்.

## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

20 வயதான நிக்கோலஸ் ருனிஸ் என்பவர் கடந்த நவம்பர் 2024 இல் முகநூலில் வெளியான ஒரு நகை விற்பனை விளம்பரத்தைப் பார்வையிட்டுள்ளார்.

அதன் பின்னர், ஓஷாவாவில் ஹில்கிராஃப்ட் வீதி மற்றும் ரிட்சன் வீதி அருகே விற்பனையாளரை சந்திக்க முயற்சித்துள்ளார்.

சந்திப்பு நடைபெறும் போது, ருனிஸ் விற்பனையாளரின் நகைகளை பிடித்து ஓட முயன்றதாக பொலிஸார் குற்றம் சுமத்தியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட நபர் சந்தேகத்திற்குரிய நபரை துரத்தி, நகைகளை மீட்டுள்ளார்.

ஆனால், சந்தேகநபர் கத்தியை காண்பித்து மிரட்டி பொலிஸார் சம்பவ இடத்திற்கு செல்வதற்கு முன்னர் தப்பிச் சென்றுள்ளார் என்று விசாரணை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த பெப்ரவரி 7ம் திகதி, 2025 அன்று, பொலிஸார் ருனிசை கண்காணித்து கைது செய்தனர்.

இந்த சந்தேக நபரிடம் எவரேனும் பணத்தையோ அல்லது பொருள்களையோ பறிகொடுத்திருந்தால் அது குறித்து அறிவிக்குமாறு பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

